தினமலர் 25.06.2025



அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சீரமைப்புக்காக ரூ.76 ஆயிரத்து 656க்கான காசோலையை பள்ளி தலைமை ஆசிரியை செந்தமிழ் செல்வியிடம் டிஎன்பிஎல் பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

# தொடக்கப்பள்ளி மேம்பாட்டுக்கு டிஎன்பிஎல் நிதியுதவி வழங்கல்

**வேலாயுதம்பாளையம், ஜூன் 25 –**

டிஎன்பிஎல் நிறுவனம் சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்ட மங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஊராட்சி பகுதிகளின் கல்வி, உட்கட்டமைப்பு மேம்படுத்த உதவி வழங்குகிறது. அதன் ஒரு பகுதியாக, பேரூராட்சிக்கு உட்பட்ட அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தரைதள சீரமைப்புக்கு ரூ.76 ஆயிரத்து 656 நிதியுதவிக்கான காசோலையை பள்ளி தலைமை ஆசிரியை செந்தமிழ் செல்வியிடம் டிஎன்பிஎல் பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார். முதன்மை மேலாளர் சிவக்குமார் உட்பட பலர் உடன் இருந்தனர்.

**தின தந்தி 24.06.2025**



புகழூர் காகித ஆலை சார்பில்

## அரசு பள்ளிக்கு ரூ.76 ஆயிரம் நிதி உதவி

நொய்யல், ஜூன்.24-

புகழூர் காகித ஆலையில் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தரைதள ஓடு பதிப்பதற்காக ரூ.76 ஆயிரத்து 656 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான காசோலையை காகித ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், பள்ளி தலைமை ஆசிரியையிடம் வழங்கினார். அப்போது முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உடனிருந்தார்.

### புகளூர் காகித நிறுவனம் சார்பில்

# அய்யம்பாளையம் அரசு பள்ளியில் தரைதள ஓடு பதிக்க நிதி உதவி

வேலாயுதம் பாளையம், ஜூன் 21–

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும். உட்கட்டமைப்பினை மேம்படுத்திடவும், பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தரைதள ஓடு பதிப்பதற்காக ரூ.76 ஆயிரத்து 656 கங்கு நிதி உதவி வழங்கி உள்ளது. அதற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் பள்ளித் தலைமை ஆசிரியையிடம் வழங்கினார். அப்போது முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உடன் இருந்தார்.



காகித ஆலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் தரைதள ஓடு பதிக்க தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் அதன் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் ரூ.76ஆயிரத்து 656க்கான காசோலையை பள்ளித் தலைமை ஆசிரியையிடம் வழங்கினார். அப்போது முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உடன் உள்ளார்.